செ.வெ.எண்.347 நாள்.31.05.2018.

திருநெல்வேலியில் அரசுப் பொருட்காட்சி–2018 நடத்துவது தொடர்பான முன்னேற்பாடு பணிகள் குறித்த ஆலோசனை கூட்டம் – மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.ஷில்பா பிரபாகர் சதீஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

––––––

திருநெல்வேலி மாநகராட்சி திடலில் அரசுப் பொருட்காட்சி–2018 ஜுன் 3வது வாரத்தில் தொடங்கி 45 நாட்கள் நடத்தப்படவுள்ளது. அரசுப் பொருட்காட்சி நடத்துவது தொடர்பான அனைத்துறை அலுவலர்களுடான முன்னேற்பாடு பணிகள் குறித்த ஆலோசனைக் கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.ஷில்பா பிரபாகர் சதீஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் இன்று (31.05.2018) நடைபெற்றது.

கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது–

திருநெல்வேலி அரசுப் பொருட்காட்சி ஒவ்வொரு ஆண்டும் ஜுன் மாதத்தில் தொடங்கி 45 நாட்கள் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகிறது. இவ்வாண்டு ஜுன் 3வது வாரத்தில் தொடங்கப்படவுள்ளது. பொருட்காட்சியில் அனைத்து அரசுத் துறை மற்றும் அரசு சார்பு நிறுவனங்கள் கலந்து கொண்டு அரசு திட்டங்கள் குறித்து பொதுமக்கள் தெரிந்து கொள்ளும் வகையில் விளக்கப்படங்கள், மாதிரிகள், மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள வளர்ச்சித் திட்டப் பணிகள் குறித்த விளக்கங்கள் போன்றவை வைக்க வேண்டும். அரசு நலத்திட்டங்கள் குறித்து விளக்கங்கள், நலத்திட்ட உதவிகளை எவ்வாறு, எப்படி பெறுவது என்பது குறித்த விளக்கங்கள் அரசுத் துறை அரங்குகளில் மக்கள் தெரிந்து கொள்ளும் வகையிலும், மக்களை கவரும் வகையிலும் அமைக்கப்பட வேண்டும். காவல் துறையின் மூலம் பொதுமக்களுக்கு தேவையான பாதுகாப்பு வசதிகளையும், மாநகராட்சி மூலம் பொதுமக்களுக்கு தேவையான குடிநீர் வசதிகளையும், துப்புரவு பணிகளையும் மேற்கொள்ள வேண்டும்,

அரசுப் பொருட்காட்சியில் பொதுமக்களுக்கு தேவையான பாதுகாப்பு வசதிகளை காவல் துறையினரும், தீ தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள தீயணைப்புத் துறையினர் செய்திட வேண்டும். அரசுப் பொருட்காட்சியினை கண்டுகளித்திடும் வகையில் பொதுமக்கள் வசதிக்காக பேருந்துகள் மாலை 3.00 மணி முதல் இரவு 11.00 மணி வரை அரசு போக்குவரத்துக் கழகத்தின் மூலம் இயக்கப்பட வேண்டும். மேலும், பேருந்துகளில் ‘‘வழி அரசுப் பொருட்காட்சி’’ என்ற ஒட்டு வில்லைகளை ஒட்டிட வேண்டும். மருத்துவத் துறையின் மூலம் பொதுமக்களின் அவசர நிலையின் கருத்தில் கொண்டு முதலுதவி சிகிச்சை மருத்துவ வசதிகளை பொருட்காட்சி மைதானத்தில் ஏற்படுத்தும் வகையில் மருத்துவக் குழுக்களை அமைக்க வேண்டும்.

அரசுப் பொருட்காட்சி–2018 பொழுதுபோக்கு அம்சங்களுடன் அரசு திட்டங்கள், நலத்திட்டங்கள், வளர்ச்சித் திட்டங்கள் குறித்து பொதுமக்கள் அறிந்து கொள்ளும் வகையில் அரசுத் துறை நிறுவனங்கள், அரசு சார்புத் துறைகள் கண்காட்சியினை அமைத்திட வேண்டும் என சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.ஷில்பா பிரபாகர் சதீஷ்,இ.ஆ.ப., அவர்கள் அறிவுரை வழங்கினார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.பூ.முத்துராமலிங்கம், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.ஆ.பழனி, திருநெல்வேலி கோட்டாட்சித் தலைவர் திருமதி.மைதிலி, தென்காசி கோட்டாட்சித் தலைவர் திரு.ராஜேந்திரன், மாநகராட்சி ஆணையாளர் (பொ) திரு.நாராயணநாயர், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திரு.கணேஷ்குமார், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.இரா.ஜெயஆருள்பதி, நகராட்சிகளின் மண்டல நிர்வாக இயக்குநர் திரு.ஹரிஹரன், பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் திரு.மாஹின்அபுபக்கர், சுகாதாரப் பணிகள் இணை இயக்குநர் திரு.இளங்கோ, வேளாண்மைத் துறை இணை இயக்குநர் திரு.செந்தில்வேல்முருகன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) திருமதி.சாந்திராணி, பொதுப்பணித் துறை செயற்பொறியாளர் திரு.பாஸ்கரன், உதவி மக்கள் தொடர்பு அலுவலர்கள் (செய்தி) திரு.வெ.சீனிவாசன், (விளம்பரம்) திரு.எம்.எஸ்.மகாகிருஷ்ணன் உள்பட அனைத்து துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருநெல்வேலி